
# காஞ்சி

நிறுவனர் அண்ணாதுரை

## டில்லி தர்பார்

18.2.68.




18 2-68



ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

# நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்.

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள். அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவை யெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப் பொருட்களுக்குத்தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களை ...ஞான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியார் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

MB

**மெட்டல் பாக்ஸ்**

*பாதுகாப்பான பாக்கிங்*

# காஞ்சி

ஆண்டு சந்தா ரு. 10 ஆறுமாதம் ரு. 5

மலர் 4 18—2—68 இதழ் 30


# புரிந்து, செயல்பட்டால் போதும்?

இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்து மாநிலங்களிலும் ஏதோ ஒருவிதமான பதட்ட நிலை நிலவிக் கொண்டிருக்கிறது.

மொழி தொடர்பாகப்பெரும்பாண்மையும், ஆதிக்கம் தொடர்பாகச் சிலவும் கிளர்ச்சி அல்லது ஆர்ப்பாட்டங்கள் மூலம் பதட்ட நிலையில் நிற்கின்றன.

எல்லாவற்றையும் அணைத்து, தக்கபடி பரிகாரங்கள் தேடித் தந்து சீர்படுத்திச் செல்லவேண்டிய மத்திய அரசு, தனது கையாலாகாத் தனத்தை மாநிலங்கள் மீது காட்டத் தொடங்கி இருக்கிறது.

கடந்த கிழமை தொடக்கத்தில், மக்களவையின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர்உசேன் அவர்கள், மத்திய மாநில உறவுகள் பற்றிப் பெரிதும் கவலை தெரிவித்திருப்பதானது இந்த நிலையை மெய்ப்பிப்பதாகவே இருக்கிறது.

> "வட்டாரம், மொழி, அல்லது இனத்தின் பெயரால் நாட்டில் பிளவுச் சக்திகளும், சச்சரவுகளும், வன் முறைச் செயல்களும் தலை தூக்கத் தொடங்கியுள்ளன. நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சக்திகளை ஒடுக்குவதற்கு அரசு உறுதி பூண்டிருக்கிறது"

என்று அவர் பேசி இருக்கிறார். அதே பேச்சின் தொடர்பாக மேலும் அவர்—

> அரசாங்கத்தின் மொழிக் கொள்கையையும், திட்டங்களையும் செயற்படுத்துவதில் ஏற்படக்கூடிய நடைமுறைப் பிரச்னைகளை நல்லுணர்வுடனும் பரஸ்பரம் பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுத்துவிட்டுக் கொடுக்கும் உணர்வுடனும் அணுகப்படும்

என்றும் விளக்கி இருக்கிறார்.

மொழி விவகாரம் என்பதனை முதலாவதாக மத்திய அரசுதான் கிளப்பிவிட்டது என்பது, நாட்டு மக்களின் நினைவிலிருந்து இன்னமும் அகற்றப்பெற்றுவிடவில்லை.

துணைக் கண்டம் முழுவதிலும் ஏகபோக ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற நச்சு நோக்கு மத்திய அரசுக்கு ஏற்படாமலிருந்திருக்குமானால், இந்தி என்ற வட்டார மொழிக்கு ஏற்றம் தரவும் அதன் மூலம் நாடெங்கும் ஒரு சிக்கலை உண்டாக்கவும், அச் சிக்கலின் விரிவடைந்த நிலை துணைக் கண்டத்தின் அமைதியையே விழுங்கிவிடத் தக்க சூழல் ஏற்படவுமான நிலைமை ஏற்பட்டே இராது என்று அறிவாளர்கள் அனுமானிக்கிறார்கள்.

பொருளாதார மந்தத்தினாலும், உணவுப் பற்றாக் குறையினாலும், தொழில்களின் முடக்கத்தினாலும், உள்ள தொழில்கள்கூட உற்பத்திச் சக்தியின் இலக்கை எட்டிப் பிடிக்காத அவலங்களினாலும் முழுதுமாக தன் கவனத்தை வேறு பக்கம் செலுத்தியிருக்க வேண்டிய மத்திய அரசு, அந்தக் குறைபாடுகளின் எதிரொலிகளைத் திரையிட்டு மூடும் ஒரு வழி முறையாக மொழிச் சிக்கலைக் கிளப்பிவிட்டதோ என்று எண்ணவுமான சூழ்நிலையைத் தோற்றுவித்துவிட்டதன் பின்பு, தோன்றிய அது இன்றைக்குப் பூதாகாரமான வடிவம் பெற்று வளர்ச்சியடைந்திருக்கிறது.

அந்த கேடுகெட்ட வளர்ச்சியின் முழு பரிணாமம் தான், குடியரசுத் தலைவர்—

> ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சக்திகளை ஒடுக்குவதற்கு அரசு உறுதி பூண்டிருக்கிறது.

—என்று எடுத்துக் காட்டியுள்ளதாகும்.

குடியரசுத் தலைவர் அவர்களது புதிய கருத்துப்படி, மொழிக் கொள்கையையும் திட்டங்களையும் செயற்படுத்துவதில் ஏற்படக்கூடிய நடைமுறைப் பிரச்னைகளை நல்லுணர்வுடனும், பரஸ்பரம் பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுத்துவிட்டுக் கொடுக்கும் உணர்வுடனும், தீர்வு காண மத்திய அரசு உண்மையிலேயே எண்ணங் கொண்டிருந்திருந்தால், விவகாரம் இந்த அளவுக்கு முற்றிவிட்டிருக்க நியாயமில்லை.

பிரச்னையின் பரிணாம வளர்ச்சிதான், மாநிலங்களின் அமைதியைக் கெடுத்து சில பல போராட்டங்கள், அல்லது ஆர்ப்பாட்டங்கள் என்பதன் பேரால் அரசின் உடைமைகள் சில பல மாநிலங்களின் தீயிடப் பெற்றும், உடைத்து நொறுக்கப்பட்டும் இதுபோன்ற விரும்பத்தகாத போக்குகளையும் ஈன்றுவிட்டிருக்கிறது.

இதுபோன்ற கிளர்ச்சிகள் காரணமாக பாழ்பட்ட உடைமைகளுக்கு அந்தந்த மாநிலங்களிடமிருந்து நஷ்ட ஈடு கோருவது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாக இரயில்வே அமைச்சர் புனாச்சா மக்களவையில் அறிவித்திருக்கிறார்.

கொள்ளி வைக்கும்படியான நிலைமையை மத்திய அரசின் போக்குகளே உண்டாக்கிவிட்ட பின்பு, அதன் விளைவுகளுக்கு மாநிலங்களைப் பலியிட நினைப்பது அறிவுக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை.

குடியரசுத் தலைவர் கூறுகிறபடி "விட்டுக் கொடுத்து" என்பதில், யார், எதனை என்பதை தெளிவாக விளக்காத வரையில் சிக்கல் தீரப் போவதில்லை; மாநிலங்களின் அமைதி நிலையும் திரும்பும் என்ற நம்பிக்கை ஒளியும் தென்படவில்லை.

இக்கிழமை தொடக்கத்தில் நாடாளு மன்றத்தில் பேசிய கழக உறுப்பினர் நாஞ்சில் மனோகரன் அவர்கள்

> "நாட்டிலே இப்போது பரவிவரும் வன்முறைச் செயல்கள் குறித்த சோகக்கதையின் வில்லனாக விளங்குவது மத்திய அரசே ஆகும்"

என்று திட்டவட்டமாக — சற்று விளக்கமாகவேகூட புலப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

அதன் பொருளைப் புரிந்துகொண்டு செயல்படும் நிலையில் மத்தியஅரசு இருக்குமானால் மட்டுமே, குடியரசுத் தலைவரின் 'ஒழுங்கு, அமைதி' பற்றிய பேச்சில் பொருளிருக்க முடியும்; அல்லாமல் பாரம்பரியப் பேச்சு தான் என்றால் அந்தந்த மாநிலங்களின் தலைவிதியை அவை அவையே தான் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனைதான் மிஞ்சுவதாக இருக்கும். ●

# பாவம், சுப்பிரமணியம்!

தமிழுக்காகத் தீக்குளித்த செம்மல்களான அரங்கநாதன்—சிவலிங்கம் போன்ற சிங்கத் தமிழர்களின் பெயர்கள் தமிழிருக்கும் வரை—தமிழ் மண் இருக்கும்வரை—தமிழ்பற்றி உலகில் பேசப்படும் காலம்வரை தமிழுடன் இணைத்தே பேசப்படும்!

அன்றும் சரி—இன்றும் சரி—இனியென்றும் சரி—தி. மு. கழகம் அவர்களது தமிழ் உணர்ச்சியை மதிக்கிறது; பாராட்டுகிறது. ஆனால் அவர்கள் மேற்கொண்ட முறையைப் பாராட்டவில்லை. நமது கருத்தை எடுத்துச் சொல்ல அறவழிப்பட்ட முறைகள் இருக்கும்போது—உடலை இப்படி தீயினுக்கு இரையாக்கிக் கொள்வது தேவையற்றது என்று கழகம் கருதுகிறது.

இவர்களைப் போன்ற பல தியாகிகளின் கனவு நிறைவேறும் வகையில் நாம் இன்று வெற்றிக் கனியைப் பறித்திருக்கிறோம்.

இந்த வெற்றிக் கனியைப் பெற நாம் நீண்ட நெடுங்காலம் போராடியிருக்கிறோம். திராவிடர் இயக்கமாக தமிழர் இயக்கமாக — வில்—புலி—கயல் பொறித்த தமிழ்க் கொடி ஏந்திப் போரிட்ட 1938-ஆம் ஆண்டிலிருந்து—30 ஆண்டு காலம் போராடிய பிறகுதான் இந்த வெற்றிக்கனி கிடைத்திருக்கிறது.

அகில உலகத்திலேயே இவ்வளவு பெரிய வீர மரணப் போராட்டம் மொழிக்காக இவ்வளவு காலம் நடந்ததில்லை—என்ற உன்னத வரலாற்றை நாம் பெற்றிருக்கிறோம்.

இந்தி எதிர்ப்பின் சின்னமாக இன்றைய தினம் விளங்குகிற ராஜாஜி அவர்கள்—அன்றைய காங்கிரஸ் முதலமைச்சராயிருந்து கட்டாய இந்தியைக் கொண்டு வந்தார்.

அப்போது அதை எதிர்த்து பெரியார் தலைமையில்—தமிழ் புலவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா தலைமையில் தமிழகம் போர்க்கொடி உயர்த்தியது. கர்ப்பவதிகளும்—குழந்தைகளும்—வாலிபர்களும்—புலவர்களும் சிறை சென்றார்கள். கும்பகோணத்தில் நடைபெற்ற போரின்போது பெரியார் பெல்லாரி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அண்ணா அவர்கள் 220 மைல் கடத்தப்பட்டு ஆறு மாதச் சிறை ஏற்றார். இப்படிப்பட்ட பல இன்னல்—இடுக்கண்களை ஏற்ற பிறகு இன்றைய தினம் இந்தி—தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இல்லை—என்ற வெற்றிக் கனியைப் பெற்றிருக்கிறோம்.

ஆனால், இதைப்பற்றி கேலி பேசுகிறார் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் சுப்பிரமணியம்; குட்டிக் கதை ஒன்றும் கூறியிருக்கிறார்.

குட்டிக்கதை சொல்வதில் பெயர் பெற்ற ராஜாஜியின் சீடராக சுப்பிரமணியம் இருந்திருக்கிறாரே தவிர—அவர் போல குட்டிக் கதைகள் சொல்லும் கலையைக் கற்றாரில்லை.

இருந்தாலும் கதை சொல்லியிருக்கிறார். ஒரு நாட்டிலே இருந்த ராஜா—தன் நாட்டிலே கொடி போட்டுக்கொண்டு வெற்றி — வெற்றி — என்று வெற்றி விழாக் கொண்டாடினானாம்; அதைப் போல அண்ணாதுரை...இந்தி ஒழிந்துவிட்டது—என்று கூறுகிறார் — இதுதான் சுப்பிரமணியம் சொன்ன கதை!

தமிழக அரசு — தனது ஆணைக்குட்பட்ட பள்ளிகளில் இருந்துவந்த இந்தி இனி இல்லை—என்று அறிவித்ததோடு—என். சி. சி. படையில் இந்தியில் கட்டளைச் சொற்கள் இருக்கக்கூடாது.

அப்படி இந்திக் கட்டளைச் சொற்கள் நீக்கப்படாவிட்டால் என். சி. சி. படையையே கலைத்துவிடுவோம் என்று திட்டவட்டமாகத் தனது தீரக் குரலை எழுப்பியிருக்கிறது.

ஆனால், சுப்பிரமணியம் இது உள்நாட்டிலே வெற்றிக்கொடி போட்டு விழாக கொண்டாடும் ராஜாவின் வேலை—என்று கூறுகிறார்!

தெரியாமல்தான் கேட்கிறேன், பாகிஸ்தான்காரன் படையெடுத்தபோது அவனை எதிர்த்து வீரச் சமர் புரிந்த பின்னர் வெற்றிக்கொடி போட்டு எங்கே கொண்டாடினோம்? இந்தியாவிலா? பாகிஸ்தானிலா?

வெள்ளைக்காரனை வெளியேற்றிய பிறகு — அந்த விழாவை நாம் கொண்டாடியது எங்கே? இலண்டன் மாநகரத்திலுள்ள அரண்மனையிலா அந்த விழாவைக் கொண்டாடினோம்? புதுடில்லியிலுள்ள செங்கோட்டையில் தானே கொண்டாடினோம்?

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி ஒழிந்ததே தவிர—ரூபாய் நோட்டில் மணியார்டர் பாரத்தில் அஞ்சல் அட்டையில்—ரயில்வே டிக்கட்டில் இந்தி இருக்கிறதே—என்று பூவராகன் கேட்கிறார்! மந்திரியாக இருந்தவர் கேட்கிறார்! அதுதான் ஆச்சரியம்!

பள்ளிகளில் நாம் இந்திப் படிப்பு இல்லை—என்றோம். ஏனெனில் அது நமது ஆணைக்கு—அதிகாரத்திற்கு உட்பட்டது!

ரூபாய் நோட்டில்—அஞ்சல் அட்டையில் இந்தி இருக்கிறது—அதற்குப் பொறுப்பு நாமல்ல; மத்திய அரசாங்கம்!

வெள்ளைக்காரனின் அரசியல் அதிகாரத்தை ஆகஸ்ட் 15ம் நாளோடு ஒழித்தோம்! இருந்த போதிலும் வெள்ளைக்கார முதலாளிகள் இன்னும் தோட்டத்தொழிலில்-சுரங்கத் தொழிலில் இருந்து வருகிறார்கள்.

வெள்ளைக்காரனின் அரசியல் ஆதிக்கம் ஒழிந்தாலும் வெள்ளைக்கார முதலாளிகள் இன்னும் ஒழியாததைப் போலத்தான்—

தமிழகத்துப் பள்ளிகளில் இந்தி இல்லை—என்றாலும்—ரூபாய் நோட்டில்—அஞ்சல் அட்டையில்—ரயில்வே டிக்கட்டில் இந்தி இருந்து வருகிறது; இதைப் புரிந்துகொள்ள வேண்டும்—பூவராகன்! ஆனால் புரிவது கொஞ்சம் கஷ்டம் தான் அவருக்கு!

நமது வீடுகளில் யாருக்காவது பிசாசு பிடித்திருந்தால — பூசாரியைக் கொண்டு வந்து பிசாசை ஓட்டுவார்கள் பிசாசு ஓட்டப்பட்டதாகக் கூறிய பின்—பிசாசு பிடித்திருந்த மனிதனை உட்கார வைத்து மகிழ்ச்சி கொண்டாடுவார்களே யல்லாமல்—பிசாசு எந்த மரத்தில் இருந்தது என்று தேடிக்கொண்டு போய் அந்த மரத்தின் கீழ் அமர்ந்து விழாக் கொண்டாட மாட்டார்கள்—என்பது இதிலெல்லாம் நம்பிக்கையுள்ள பெரியவர்களுக்குத் தெரியும்!

ஆனால் சுப்பிரமணியத்துக்கும் புரியாமல்—விழாவை இங்கே ஏன் கொண்டாடுகிறாய் என்று கேட்கிறார்.

பாவம்-ராஜாக் கதையைச்சொல்லி ஏன் இந்த மாஜி மந்திரி (சுப்பிரமணியம்) சிக்கிக்கொள்கிறாரோ தெரியவில்லை!

கலைஞர் மு கருணாநிதி

(தீக்குளித்த தியாகிகள் நினைவு விழாவில்)

# இன்ப ஒளி

## அண்ணாதுரை

தஞ்சை ஆ. சேக்கிழார்
14.2.68.

## இதுவரையில் ...!

“வென்றோம் விடுதலை” என்ற பேச்சு அளித்திடும் இன்பத்துக்கு ஈடாக வேறெதுவும் இருந்திட முடியாது. அந்த இன்பத்தை எண்ணி எண்ணி இதயங்கள் மகிழ்ச்சியிலே பாடும் பள்ளுக்கு வகுக்கப்படும் பாதைதான் எத்தனை எத்தனை வழிகளில், எத்தனை எத்தனை துறைகளில் எதிரொலிக்கிறது! நாட்டு மக்களில் பலதரப்பட்டவர்களும் கூடி விடுதலை விழாவினைக் கொண்டாடிக் களிக்கிறபோது யார்தான் அதனைத் தடுத்து நிறுத்திட வல்லார்!

மிடிமை ஒழிந்தது! பகைமை தொலைந்தது! வறுமை அழிந்தது! வாட்டம் தீர்ந்தது! வாழ்வு கிடைக்கும்!! வளம் சுரக்கும்!! என்ற பெருமிதத்தில் மலைநாடு விழாக்கோலம் பூணுகிறது.

மலைநாட்டுப் பாதுகாவலன் விக்கிரமன் எதிரி முகாமை பூண்டறச் செய்த வெற்றிச் செய்தியோடு, அந்தப் போரில் மாற்றாரை மண்டியிடச் செய்த பேறு பெற்ற வீரவாளை, மலைநாட்டு மன்னன் பத்தாண்டுச் சிறுவன் குமாரவேலனின் பாதகமலங்களில் பெருமையோடு படைக்கிறான்.

போரில் ஈடுபட்ட வீரர்களுக்கும், சிறப்புப் பதவிகள் ஏற்றுச் செயல்பட்டவர்களுக்கும் மன்னன் குமாரவேலன், வீரப் பட்டங்களும், வீரப் பதக்கங்களும் கொடுத்து கௌரவிக்கிறான்.

அதுகண்டுப் பூரித்த அரசவை, மன்னன் குமாரவேலனுக்கு வாழ்த்தொலி எழுப்ப, அது விண் எட்டி நிற்கிறது.

இதன், எதிரொலியாக நாடு, நகரெங்கும் விழாக்கோலம்! ஒவ்வொரு துறையினரும் தங்கள் தங்கள் துறையின் இயல்பிற் கொப்ப விழாவெடுத்து மகிழ்கின்றனர்.

போர்க்களம் சென்று மீண்டோர், தத்தமக் குரியாரோடு போர் அனுபவங்கள் பற்றிப் பேசிக் களிக்கின்றனர்; ஒருவர் புரிந்த வீரசாகசங்கள் பற்றி மற்றவர் விமர்ச்சித்துப் பூரிக்கின்றனர்!

புதுப்போர் கண்டோரின் போக்கு இப்படி! முன்னாள் போர்வீரர்கள் மட்டும் என்னவாம்! தங்கள் தங்கள் முன்னாள் அனுபவங்களுடன் இந்நாள் அனுபவத்தை ஒப்புமை கண்டு உவக்கின்றனர்.

அத்தகையோரில் இருவர் மாந்தோப்பாரும், முல்லையூராரும். வாழ்ந்து தீரவேண்டிய வயதைக் கடந்து விட்டவர்கள்.

மாந்தோப்பாரின் மக்கள் மூவரும், முன்னாளில் நடைபெற்ற மாடூர் போரில் ஈடுபட்டு விழுப்புண்ணோடு புகழ் பொறித்துப் போயினர். அந்த ஏக்கத்தால், தள்ளாமையில் தள்ளாடுகிறார் அவர்.

முல்லையூராரும் அப்படித்தான்! மக்களை அனுப்பவில்லை—மாறாக தானே அந்த மாடூர் போரில் கலந்து கொண்டவர். தனது போர் பற்றிய அனுபவங்களை யெல்லாம் ஒரு நூலாக எழுதி வைத்திருக்கிறார்.

முதியவர் இருவர்களது பேச்சும் மாடூர் போர்பற்றித் தொடங்கியதும் பெருமை பிடிபடவில்லை முல்லையூராருக்கு. தன் மகள் கொண்டலழகியைக் கூப்பிட்டு மாடூர் போர் பற்றிய வீரகாவியத்தைப் படிக்கச் சொல்கிறார். கொண்டலழகி படிக்கிறாள்:

“மாடூருக்கும், எழிலூருக்கும் போர் தொடங்கிவிட்டது. எழிலூர் மக்களது நலத்தையும் வளத்தையும் சுரண்டிக் கொழுத்த மறவர் படை மீண்டும் மாடூர் தாக்குதலைத் தொடங்கிவிட்டது.

எழிலூர் மக்களின் நல்வாழ்வுக்காகவே தன்னை வாழ்வித்துக்கொண்டிருக்கும் மறவர் படை, இது கண்டு கொதிக்கிறது.

கணவாய் முகத்தில் இருதரப்புப் படைகளும் சந்திக்கின்றன; மறவர்படை, சிறிதும் சளைக்காதது! விவேகம் நிரம்பிய கூர்த்த மதி கொண்டது.


மாடூர் படை, வீரத்தின் துணைகொண்டு மறவர் படையை வீழ்த்த முடியாதென்று, சூழ்ச்சித்திறன் மேற்கொள்கிறது.

வாளொடு வாள் மோதும்போது, எதிரியின் கைவாள், தானாக ஈர்த்துக்கொள்ளப்படும் முறையில் காந்தசக்தி கொண்ட புதிய போர் ஆயுதம் கொண்டு போராட வருகிறது.

தருணத்தில் இதனைப் புரிந்துகொண்ட மறவர் படையின் தலைவர், படையின் ஒரு பகுதியைப் பிரித்து, எழிலூர் மக்களை கோட்டையூருக்குக் கொண்டுசெல்லப் பணிக்கிறார். ஒருபகுதி மாடூர் படையுடன் போரிடுகின்ற அதே வேளையில், மறுபகுதி மக்களது வாழ்வுக்கும் கற்புக்கும் ஊறு வராதபடி காக்கும் புனித முயற்சியில் அவர்களைக் கோட்டையூருக்குக் கொண்டு செல்ல முயல்கிறது.

சிங்கநாதன் என்பவன் இதனைக் காண்கிறான். படை பிரிந்து ஓடிவருவதைக் கண்டு கேலி பேசுகிறான்; உயிருக்கு அஞ்சிய கோழைகளா? என்று கேட்டு படை வீரர்களது ஆத்திரத்தைக் கிளறுகிறான்.

சிங்கநாதன், சில காலத்துக்கு முன்பு எழிலூர் மறவர் படையில் அங்கம் வகித்தவன். மறவர் படை, மாடூர் படையுடன் போர் தொடுக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தவன். போராட்டத் திட்டங்கள் எல்லாம்கூட வகுத்துக் கொடுத்தவன். தீட்டப்பட்ட திட்டங்கள் செயலுருப் பெற்றபோது சொல்லிக்கொள்ளாமல் படையைவிட்டே ஓடிப் போனவன் அவன். அப்படிப்பட்ட கோழை, எழிலூர் மக்களைக் காத்து, அவர்களைக்கோட்டையூர் சென்று குடியேற்றப்போகும்படைப்பிரிவைக் கண்டு கேலி பேசுகிறான்! கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான்! படையினரில் சிலர் நின்று அவன் வாதத்தைக் கேட்கின்றனர்! வீரம் கொப்பளிக்கும் உரை கேட்டு, தங்களுக்கு அவனையே தலைமையேற்க அழைக்கின்றனர்! அவன்தான்கோழை யாயிற்றே! சிங்கநாதன் என்றால் சிங்கம் போலச் சீறிப் போரிடுபவர் என்ற பொருளா என்ன? சிங்கநாதம் என்றால் சிங்கம்போல கர்ஜனை செய்வதுதானே! அந்த கர்ஜனை போலியானது என்பதை அறிந்து, மறவர் படைப்பிரிவு எழிலூருக்குள் புகுகிறது, மக்களை கோட்டையூருக்குக் கொண்டு செல்ல!



திறம்பட அந்தக் காரியம் முற்றுப் பெறுகிறது. எழிலூர் மக்கள், பாதுகாப்பு மிகுந்த கோட்டையூருக்குள் போய்ச் சேர்ந்து விடுகின்றனர்.

இனி?

எழிலூர் மக்களைச் சுரண்ட முடியாது; அவர்களை எதிர்க்க முடியாது என்று கண்டுகொண்டு மாடூர் பின்வாங்குகிறது.

மாடூர் படையை எதிர்த்து, மறவர் படை களவாயில் கொட்டிய இரத்தம் வீணாகிப் போய்விடவில்லை.

வீரம், விழலுக்கு இறைத்த நீராகிப் போய்விடவில்லை.

மறவர் படை, அழிக்கப்பட்டுப் போய்விட்டால் மஞ்சள் குளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கும் எண்ணத்தில் மண் விழுந்தது!

வெற்றிச் சங்கு ஒலித்தது! கொடி பறந்தது! கொற்றம் நிலைத்தது!!

—என்று கொண்டலழகி தான் படித்த கதையை முடிக்கிறாள்.

மலைநாட்டு அடிமைத்தளை அகற்றப்பெற்ற பெருவிழாவில், போரில் பங்கேற்று வீரச்செயல் இயற்றியோர்க்கு விருதுகள் வழங்கப்பெற்றோரில், ஒருவன் குணாளன்; இளைஞன். தான் பெற்ற பெரும்பேற்றை எவர் கண்டு களிபேருவகை எய்த வேண்டுமென்று எண்ணி இருந்தானோ, அவரை அந்த அவையில் காணமாட்டாது கலங்கினான் குணாளன்.

அதே வேளையில், அவனது உள்ளத்தை காதல் போதையால் நிரப்பிவிட்ட அவள், அவனைப்பற்றி அவளது தந்தை அறிவானந்தரிடம் பலபடப் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறாள். மருத்துவரான அவர், பச்சிலையைப் பிழிந்து சாறு எடுப்பதில் காட்டிய அக்கறையை, மகளது பேச்சுக்குத் தரவில்லை. இது உணர்ந்த அவரது மகள் வேதனையோடு அவ்விடம் விட்டகல்கிறாள்.

போர் காரணமாக நாடு அடைகின்ற சிறுமைபற்றியும் தொல்லை, துயரங்கள் பற்றியும் எண்ணிக் கொண்டே இருந்த அவர், எதிரே நிமிர்ந்து பார்க்கும்போது அவள் அங்கில்லாதது கண்டு வருந்துகிறார்.

அந்த வருத்தத்துடனேயே சாறு பிழியத் தொடங்கும்போது, அருகிலிருந்து "அப்பா, ஐயோ!" என்று அவர் மகள் அலறும் குரல் கேட்டுத் திடுக்கிடுகிறார்.

## மாலதியைத் தெரியுமா?

[3]

"ஐயோ! அப்பா!" என்று அலறியபடி தன் மகள் ஓடோடி தன்னை நோக்கி வரக்கண்ட அறிவானந்தர், சிறிதளவு பதறிப்போனார். கலயம்கூடக் கீழே கவிழ்ந்துவிட்டது.

என்னம்மா! என்ன? என்ன? — என்று கேட்டபடி, மகளை அருகே அழைத்துக் கேட்டார்.

"புலிக்குட்டி அப்பா! எப்படியோ, எங்கிருந்தோ ஒரு புலிக்குட்டி என் அறைக்குள் வந்துவிட்டிருக்கிறது, தோட்டத்துப் பக்கமிருந்து" என்று பயமிகுதியுடன் திருமதி கூறிடக் கேட்ட அறிவானந்தர் திகைத்துப் போனார்.

புலியா! இந்த மாளிகையிலா! தோட்டப்பக்கமிருந்தா! என்று கேட்டபடி, கழி ஒன்றினை எடுத்தார்

"குட்டி அப்பா! குட்டி! ஆனாலும் புலிதானே! சீறுகிறது! பாய்கிறது! யாராவது ஆட்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு செல்லுங்கள் அப்பா! தனியாகப் போகவேண்டாம்!—என்று பயமும் பரிவும் கலந்த குரலில் திருமதி கூறினாள்.

"அது ஒன்றும் செய்யாது! என்ற குரல் கேட்டு தந்தையும் மகளும் திரும்பிப் பார்த்தனர்; எதிர்ப்புறம், எழிலரசன் குணாளன், புன்னகைபூத்த முகத்துடன் நின்றிருக்கக் கண்டனர்.

ஓ! இது இந்த சிங்கக்குட்டியின் வேலையோ!— ஏனப்பா குணாளா! திருமதியைத் திடுக்கிடச் செய்ய, புலிக்குட்டியை ஏவிவிட்டாயோ!—என்று கேலி நிரம்பிய குரலில் கேட்டார் அறிவானந்தர்.

திருமதி விளையாட புலிக்குட்டி கொண்டுவந்தேன்' திடுக்கிடச் செய்ய அல்ல. முறத்தாலே புலியை அடித்து விரட்டிய தாய்க்குலம், ஒரு புலிக்குட்டியைக் கண்டு நடுநடுங்கிப் போகும் என்று நான் கண்டேனா!— என்று ஏளனம் செய்தான் குணாளன்.

கிள்ளை, மயில், குயில், நாகணவாய்ப்புள், எனும் எத்தனையோ உண்டு எழில் மடவார் விரும்பி விளையாடிட! உனக்குப் போயும் போயும் ஒரு புலிக்குட்டிதானா கிடைத்தது! ஒருவிதத்தில் பொருத்தம்தான், அவரவர் தத்தமது நாட்டுப் பொருளைத்தான், பரிசுப் பொருளாகக் கொண்டுவந்து கொடுப்பர்! உன் நாட்டிலே உள்ள பொருளை நீ கொண்டு வந்தாய்! தவறில்லை!! காட்டிலே காணப்படும் போர் வெறியை நாட்டு இயல்பு ஆக்கிவிட்ட நல்லூரானல்லவா! ஆகவே உனக்கு புலிக்குட்டிதான், பரிசுப் பொருளாகக் கிடைத்திட முடியும் — என்று அறிவானந்தர் மேலும் பரிகாசம் பேசினார்; ஆனால் பாசம் நிறைந்த பார்வையைச் செலுத்தினார். மகளின் கன்னத்தை கிள்ளியபடி, "மகளே! ஒரு மாவீரனை மணாளனாகக்கொள்ளத் தீர்மானித்து விட்டு. ஒரு புலிக்குட்டிக்குப் பயப்படலாமா! என்று கேட்டுக்கொண்டிருக்கும்போதே, புலிக்குட்டி அலறிக்கூச்சலிட்டபடி ஓடிவரக்கண்டார்; அதைத் துரத்திக்கொண்டு, தோட்டத்துக் காவலுக்காக இருந்த வேட்டை நாய் கோபாவேசத்துடன் பாயத் தொடங்கியது. அடே! அடே! புயல்! புயல்!— என்று அறிவானந்தர் கூவி கழியைக் காட்டி மிரட்டி புயல் எனும் பெயருடைய வேட்டை நாயை அடக்கினார்; அதேபோது, குணாளன் புலிக் குட்டியை எடுத்து வைத்துக்கொண்டு, அதன் பயத்தைப் போக்க தடவிக்கொடுத்தான்.



பாவம்! ரொம்பவும் பயந்துவிட்டதப்பா, புலிக் குட்டி!—என்று பரிவு காட்டலானாள் திருமதி.

புலிக்குட்டியானாலும், 'அவன்' கொண்டுவந்தது என்று தெரிந்ததும், ஒரு பரிவு சுரந்துவிட்டதோ, திருமதி! அதுதான் மங்கையர் இயல்பு! மகளே! மற்றோர் இயல்பைக் கவனித்தனையா! புலிக்குட்டியைக் கண்டு உனக்குப் பயம் ஏற்பட்டது! நமது புயலைக் கண்டதும் புலிக்குட்டிக்குக் கிலி பிறந்துவிட்டது! போரிலேகூட இதேதான் இயல்பு. உன் குணாளனைக் கண்டு சிலர் குடல் தெறிக்க ஓடி இருந்திருப்பார்கள்; பகைவர் தொகை மிகுதியாகிவிட்ட நிலையில், உன் குணாளன் பயத்தால் வெடவெடவென ஆடி இருப்பான்! தாக்கும் சக்தி, ஒன்றை ஒன்று அளவு பார்த்துக்கொள்வதுதான் போர்! எதிரியின் வாள்வீச்சு நம்மீது வீழா முன்பு, நமது வாள் அவன் தலையைச் சாய்த்திட வேண்டும்! கொல்! கொல்லப்படாமலிருக்க வேண்டுமானால்! இது தான் களத்திலே மேலோங்கி நிற்கும் இயல்பு; முறை; இலக்கணம்; தந்திரம்; திறம்; எல்லாம். ஒருவர் அழிய வேண்டும், மற்றவர் வாழ்ந்திட! அது குணாளன் போற்றிடும் முறை! நானோ இருவரும் வாழவேண்டும் என்கிறேன்......மகளே! உன் கோபப் பார்வையின் பொருள் நன்றாகப் புரிகிறது. தேசத்துரோகப் பேச்சுப் பேசுகிறேன் என்று நினைத்துக் கோபம்கொள்கிறாய். நான் ஒரு மருத்துவன் அம்மா! மருத்துவன்! சாவைத் தடுத்திட முயல்பவன், சாகடிக்கும் முறையை நாடுபவனல்ல ......குணாளா! உனக்கும் கோபமாகத்தான் இருக்கும். களத்திலே நீ காட்டிய வீரத்தைப் பாராட்டி, விருது பெற்றாய். நாடே கொண்டாடுகிறது! எனக்கு மட்டும் என்ன, பெருமையாக இல்லையா! பெருமைதான்! மகிழ்ச்சிதான்! ஆனால் நான்தான் ஒரு பித்தன் ஆயிற்றே........அப்படித்தானே ஊர் பேசுகிறது........ ஆகவே ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறேன்.

நான் தங்களை அவ்விதம் கருதுவதில்லை, கேட்டுப் பாருங்கள் திருமதியை! தங்களின் நோக்கம் நேர்த்தியானது; இன்றுள்ள சூழ்நிலையில் அந்த நேர்த்தியை முழுவதும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. பலரால், மிகப் பலரால்......வாழ்வு பொது என்பது தங்கள் கொள்கை; போற்றுதலுக்குரியது! அழிவு கூடாது என்கிறீர்கள்; மறுத்திடுவார் எவரும் இருந்திட இயலாது. தங்கள் போக்கு எனக்குப் புரியாமலுமில்லை, பிடிக்காமலுமில்லை. ஆனால் ஒரே ஒரு பயம் எனக்கு...

'அஞ்சா நெஞ்சன்' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்ற அன்று, பயம்' என்ற பேச்சைப் பேசுவது, சரி! குணாளா! என்னை, மற்றவர்போல, பித்தன் என்று எண்ணிக்கொண்டால், இன்னும் என்ன மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவேனோ என்ற பயம் ஏற்படலாம். நாட்டுப் பற்று அற்றவன் என்று எண்ணிக்கொண்டால், என் மீது கோபம் ஏற்படலாம். நீயோ என் நோக்கம் சிலாக்கியமானது என்று நம்புவதாகச் சொல்லுகிறாய். பிறகு....எதிலே பயம்...... எக்காரணத்தால்பயம்......

தாங்கள் சிறப்புமிக்க மனித தர்மத்தைப் போற்றுவதால், போர் அழிவுமூட்டுவது. ஆகவே தவிர்க்கவேண்டும் என்று நல்லுரை கூறுகிறீர். போற்றுகிறேன். ஆனால் இதன் விளைவாக நமது மக்கள், போராற்றலையே இழந்துவிடின், அதற்கான திறமையைப் பெற்றுக்கொள்ளாது இருந்திடின், வஞ்சக மிக்க எதிரிகள், ஆதிக்க வெறியர்கள் வன்கணாளர்கள் நாட்டைத் தாக்கிடக் கிளம்பிடின் நமது கதி என்னாகும் என்பதனை எண்ணும்போதுதான், பயம் மேலிடுகிறது!

நியாயமான பயம் குணாளா!! மிக நியாயமான பேச்சு! போர் கூடாது என்று ஒரு நாட்டவர் மட்டும் கொள்கையாகக் கொண்டிடின், நீ கூறும் நிலை எழக்கூடும், நான் அந்த நிலை எழவிடக் கூடாது என்பதனை ஒப்புக்கொள்கிறேன். நான் கருதுவதும் விரும்புவதும், ஒரு நாடு மட்டுமல்ல, நாடுகளெல்லாம் கூடி, போர் இனிக் கூடாது என்று ஒரு உறுதியினை மேற்கொண்டு

## அறிவிப்பு

பொங்கல் மலருக்குப் பிறகு, "காஞ்சி"யின் 21-1-68, 28-168, 4-2-68 ஆகிய இதழ்கள் வெளியிடப்பெறவில்லை என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும் நூல் நிலையங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—உரிமையாளர்.
"காஞ்சி"

உள்ளத் தூய்மையுடன் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது...

அமாவாசையில் நிலவு ஒளிவிட வேண்டுமாம், அப்பாவுக்கு!...

எள்ளி நகையாடிடுவது மிக எளிது திருமதி! ஆனால் அவர் நோக்கத்தில் காணக் கிடக்கும் ஆழ்ந்த பொருளை உணரவேண்டும்...நான் முயற்சிக்கிறேன்...

வெட்ட வேண்டிய தலைகளை எல்லாம் வெட்டியான பிறகு! கொட்டவேண்டிய குருதி அவ்வளவும் கொட்டியான பிறகு! கழுகுக்கும் நரிக்கும் வயிறு புடைக்க விருந்து அளித்தான பிறகு! இப்போது அப்பாவுடன் சேர்ந்து வேதாந்தம் பேசுகிறீர்! இதற்கு ஒரு சிறப்புப் பட்டம் தருவார்கள் என்ற நினைப்போ!

வர, வர, உனக்கு...என்று குணாளன் திருமதியின் தலையில் குட்ட முயற்சிக்கிறான். அவள் கலகலவெனச் சிரித்தபடி, உட்பக்கம் ஓடுகிறாள். அவன் துரத்திச் செல்கிறான். புலிக் குட்டியும் உடன் ஓடுகிறது; புயல், உறுமுகிறது. அறிவானந்தரின் பார்வையைக் கண்டு, ஒரு பக்கம் சென்று படுத்துக்கொள்கிறது. அறிவானந்தரின் முகம் மகிழ்ச்சியால் மலருகிறது! பக்குவப்பட்டுக் கொண்டு வருகிறான்! வேக வேகமாக! நான் எதிர்பார்த்ததைவிட வேகமாக! — என்று தனக்குள் கூறிக் கொண்டு, பச்சிலையுடன் அளவளாவுகிறார்.

குணாளன், அறிவானந்தருக்கு நெருங்கிய உறவினன் அல்ல என்றபோதிலும் இரு தலைமுறைகளாக நட்புத் தொடர்பு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட குணாளன், அறிவானந்தரின் அரவணைப்பைப் பெற்றே வளர்ந்தான். குடும்பச் சொத்து ஓரளவு இருந்தது. அதனைப் பெருக்கிக் கொள்வதிலே அவன் அதிகம் நாட்டம் காட்டவில்லை. கல்வி கேள்விகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான், போர்ப் பயிற்சி தரமாகப் பெற்றான். தன்னை ஒத்த வாலிபர்கள், ஆடலிலும் பாடலிலும், களியாட்டங்களிலும் காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தபோது குணாளன், அறிவானந்தரிடம் மணிக்கணக்கிலே பேசி மகிழ்ந்துகொண்டிருந்தான். காரணத்தோடுதான் குணாளன், எப்போது பார்த்தாலும் அந்த முதியவருடன் பேசிக்கொண்டிருக்கிறான். நாம் எத்தனையோ ஆடலரங்கங்களில் தேடித் தேடிக் காணமுடியாத ஆடலை அவன் அங்கு காண்கிறான். திருமதியின் நடை போதாதா! பேசுகிறாள் என்கிறோம். பாட்டு மொழி அல்லவா கேட்கிறான் குணாளன். ஆண்டு பல பயிற்சி பெற்று பாவையர் ஆடிடும் நடனத்திலே எத்தனையோ குறை மலிந்திருக்கக் காண்கிறோம். திருமதி, அன்னப் பெடை! அழகு மயில்!! இன்னிசைக் குயில்! காரியத்தோடுதான் அக்கட்டிளம் காளை மருத்துவரின் மாளிகையிலேயே இருந்து வருகிறான்—என்று வேடிக்கையாகப் பேசத்தான் செய்தனர் பலர்.

குணாளன், திருமதிக்கு ஏற்ற மணாளன் என்பதிலே எவருக்குமே ஒருமித்த கருத்து இருந்துவந்தது. அறிவானந்தரும் இந்தத் திருமணத்தை விரும்புகிறார்; விரைவிலேயே செய்து முடித்துவிட திட்டமிட்டிருக்கிறார் என்று பலரும் பேசிக்கொண்டனர்.

காதல் பாதை கரடு முரடானது என்று கூறுகிறார்கள். ஆனால் குணாளன் விஷயத்திலே பாருங்களேன், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருக்கிறது என்று பலர் பேசினர்; அருவருப்புடன் அல்ல, அகமகிழ்ச்சியுடன். குணாளன் எல்லோரிடமும் இனிய முறையில் பழகுபவன்; எவரையும் கடிந்துரைத் தறியாதவன்; தன்னாலான அளவு பிறருக்காகப் பணியாற்றுவதிலே மகிழ்பவன். எனவே அவன் போர்க்களத்தில் பெற்றது போலவே காதற் களத்திலும் வெற்றி பெறுவது கண்டு அனைவரும் பாராட்டவே செய்தனர். துல்லிய மான வானவெளியில் முழு நிலவு நீந்திடுவதுபோல, குணாளன் இருந்திடக் கண்டனர்.

வெண்ணாட்டின் பிடியிலிருந்து திருநாட்டை மீட்டிட, நடந்த போரிலே, குறிப்பிடத்தக்கவனாகிவிட்டதால் விரைவிலேகுணாளன், படைப்பிரிவு ஒன்றினுக்குத் தலைவன் ஆக்கப்படுவான்; படிப்படியாக உயர்ந்து, தளபதியாகவே இடம் பெற்றுவிடுவான் என்று அரச அவை வட்டாரமே பேசிற்று. குணாளனின் வாழ்க்கை இனி புன்னகைப் பூந்தோட்டமாகப் போகிறது என்பது பற்றிப் பேசாதார் இல்லை.

தந்தையின் போக்கு குறித்து சில வேளைகளில் திருமதி கேலி பேசி வந்த போதிலும், உள்ளூற பெருமிதமே கொண்டிருந்தாள். தாயை இழந்த அந்தத் தையல் தந்தையிடம் அளவற்ற பாசம் கொண்டிருந்தாள். அவருடைய முறைபற்றி முழுவதும் அறிந்து கொள்ள இயலாது போயினும் அவருக்குத் துணை செய்வது தன் கடமை என்பதைத் தெளிவாகக் கொண்டிருந்தாள். அந்தக் கடமையையும் மிகுந்த களிப்புடன் செய்து வந்தாள். அறிவானந்தரின் மருத்துவ ஆராய்ச்சிக் கூடத்தில் இருந்து கொண்டு துணை புரிவதிலே தனி ஆர்வம் காட்டி வந்தாள். மூலிகை தேடிட முதியவர் செல்லும் போது சில வேளைகளில் உடன் செல்வாள். உனக்குத் தேவையான மலர்களைப் பறித்துக் கொள் திருமதி! என்று அவர் கூறுவார்; மலருக்கு என்ன அப்பா! நமது மாளிகைத் தோட்டத்திலே எல்லா மலர்களும் உள்ளன! உனக்குத் தேவையான மூலிகையைத் தேடித் தருகிறேன்; அந்த மூலிகை மட்டும் எப்படி இருக்கும் என்று அடையாளம் காட்டிவிடு என்று கொஞ்சு மொழியில் பேசுவாள்.

சில வேளை முதியவர் சோர்ந்துபோய்விடுவார்; வேலை மிகுதியினால் அல்ல, அவர் எதிர்பார்த்த மருந்து வகை தரமாக அமையாததால். தோல்வி மனப்பான்மை தோன்றிவிடும். அதை உணர்ந்து திருமதி, அவருக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டுவாள். அவர் அளித்த மருந்தினால், எவரெவருக்கு நோய் நீங்கிற்று, உடல் நலம் பெற்றனர் என்ற விவரமளித்து உற்சாக மூட்டுவாள். தந்தை போன்றே எளியோருக்கு உதவி செய்யும் பண்பினைப் பெற்றிருந்தாள். மொத்தத்தில் அந்தக் குடும்ப வாழ்க்கை இசை ஒலி எழுப்பிச் செல்லும் அருவியின் அழகுக்கு ஒப்ப விளங்கிற்று.

"அப்பா! எத்தனையோ மருந்து வகைகளைத் தயாரித்திருக்கிறீர். தக்க பலனும் கிடைத்ததாகக் கூறுகிறார்கள். என்றாலும் மேலும்மேலும் ஆராய்ச்சி நடத்திய படி இருக்கிறீரே, வேறு ஏதேனும் அபூர்வமான மருந்து வகை செய்திட விருப்பமா...என்ன மாமருந்து அது... எந்தப் பிணி போக்க...என்று கேட்பாள் திருமதி. எல்லாப் பிணிக்கும் மூலமான ஒரு பிணி இருக்கிறது திருமதி! அந்தப் பிணியைப் போக்கிடும் மாமருந்துதான் தேடுகிறேன்...என்பார்.

அது என்ன பிணி அப்பா! இத்தனை மருந்துகளுக்கும் கட்டுப்பட மறுக்கும் பொல்லாத பிணி?—மகள் கேட்பாள்,

அதுவா அம்மா, பசிப் பிணிதான்!—என்பார் அறிவானந்தர். விளக்கமும் அளிப்பார்.

ஆமப்பா! பசித்துக் கிடப்பவர்களைப் பார்க்கும் போது, நமது இதயத்திலேயே ஒரு வலி ஏற்பட்டுவிடுகிறது...என்பாள் திருமதி.

ஆமாம் திருமதி! பசி எனும் அந்தப் பொல்லாத பிணி கொண்டவர்களை மட்டுமல்ல, அதனைக் கண்டவர்களையும் வாட்டி வதைத்திடும். அறு சுவை உண்டிக்குப் பிறகு, பூங்காற்று பெற்றிடக் கிளம்பிடும் சீமான் எதிரில் பசியால் துடித்திடும் ஒரு 'பராரி' தென்படின், என்னாகும்! சீமானைப் பிணி பிடித்துக் கொள்ளும்; இதயம் உள்ள சீமானை...

அப்பா! பசிப் பிணியை ஓட்டிடும் மாமருந்து கண்டறியத்தான் வேண்டும். உலகம் தோன்றிய நாளாக இருந்து வரும் கொடிய பிணியினை என் அப்பாதான் ஒழித்துக் கட்டினார்; மனிதகுலம் வாழ்ந்திட வழிதேடிக் கொடுத்தார் என்று கூறிக் கூறிப் பூரிப்படைய விரும்புகிறேன்......

இவ்விதமாகவெல்லாம் தந்தையும் மகளும் பல முறை பேசிக் கொள்வதுண்டு. மருத்துவத்துறை பற்றி மகள் ஆர்வத்துடன் பேசும்போதெல்லாம், அறிவானந்தரின் பார்வையிலே ஒரு ஏக்கம் கலந்திருக்கும். திருமதி மட்டும் மகளாக இல்லாமல், மகனாக இருந்திருந்தால்... என்ற எண்ணம் போலும்...மறுகணம் அவர் முகம் எதையோ எண்ணி மகிழ்ந்திடும்! என்ன எண்ணிக் கொள்கிறார்? குணாளன் மருமகனாகப் போகிறான்; மகனில்லாக் குறையை நீக்கப் போகிறான் என்ற எண்ணமாக இருக்குமோ! ஊர் முழுவதும், குணாளன் படைத் தலைவனாகப் போகிறான், போர்த் திறத்திலே வல்லமை பெற்றுக் கொண்டு வருகிறான் என்று பேசிக் கொண்டது; ஆனால் அந்த முதியவர் மட்டும், குணாளன், தன்னுடன் இணைந்து மருத்துவத்துறையிலே ஈடுபாடு கொள்ளப்போகிறான் என்பதான ஓர் நம்பிக்கையைக் கொண்டிருந்தார். போர் வீரனாகப் பணியாற்றுகிறான் என்றாலும் கொடுமையைக் கண்டால் வெறுப்படைகிறான்: போர் சென்று திரும்பியவர்கள், களத்திலே எப்படி எப்படி வெட்டினோம், குத்திக் குடல் எடுத்தோம், ஓட ஓட விரட்டினோம், ஊர்களைக் கொளுத்தினோம், பெண்டு பிள்ளைகளைப் பதறப்பதறத் துரத்தினோம் என்றெல்லாம் எக்களிப்புடன் பேசி வந்தது போலக் குணாளன் பேசுவதில்லை. மிகவும் தேவைப்பட்டதால், தனக்குத் துளியும் பிடிக்காத ஒரு செயலில் ஈடுபட நேரிட்டது என்று உணர்ந்தவன் போலக் காணப்பட்டான். அந்த உள்ளப்பாங்கு, முதியவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

அந்த மனப்பான்மை, குணாளனை மெள்ள மெள்ள, தன்னிடம் கொண்டு வந்து சேர்த்துவிடும் என்று எண்ணி மகிழ்ச்சி கொண்டார். நான் மேற்கொண்டுள்ள பணி செம்மையாக நடைபெற, வெற்றி கிட்டிட, இந்த இளைஞன் தேவை! இதயமுள்ள இளைஞன்! நல்லியல்புநிரம்பிய இளைஞன்! இவன் மட்டும் எனக்குத் துணையாக அமைந்துவிடுவானானால் வெற்றியைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்து என் முற்றத்திலே நிறுத்தி விடுவேன்!—என்று பெருமிதத்துடன் தனக்குத்தானே முதியவர் கூறிக்கொள்வார். நாடு காத்திட வருக! என்றனர்; சென்றான். மக்களைக் காத்திட வருக!—என்று அழைத்தால் வாராதிருப்பானோ!! நாடு என்றால் என்ன? காடும் கழனியும் மலையும் மடுவும் மட்டுமா!! நாடு காத்திடுவது என்றால், எல்லை காத்திடுவது மட்டுமா! எமது மண்ணிலே ஒரு பிடியும் மாற்றானிடம் பிடிபட விடோம் என்று முழக்கமிடுகிறார்கள். முழக்கம்! வீரத்தின் குரல்! வேண்டாம் என்பாரில்லை. ஆனால் மண் நமக்குச் சொந்தம்; மக்களுக்கோ வறுமையும் பிணியும் சொந்தம் என்றா பொருள்? இல்லையே! இதனை மிக நன்றாக உணர்ந்தவனாயிற்றே நம் குணாளன்! அவன் எப்படி என் அழைப்பை மறுக்க முடியும். நிச்சயம் வருவான்! வந்துகொண்டே இருக்கிறான்!! — என்று முதியவர் உறுதியாக நம்பினார். ஆனால் குணாளன் வருகிற வரையில் வேலை செய்யாதிருக்க இயலுமா! வேலை செய்தபடி இருந்தார். கடுமையாகவே உழைத்து வந்தார்.

ஊரே கோலாகல விழா கொண்டாடிக் கொண்டிருந்த அன்றுகூட அவர் தமது பணியிலே எப்போதும்போல மும்முரமாக ஈடுபட்டிருந்தார்.

குப்பத்தில், குடிசை வீட்டில் ஒரு உழவனுக்கு வைத்யம் பார்க்கிறார். அவனுக்குக் கால் மூட்டிலே வீக்கம். நாலு நாட்களுக்கு முன்பு பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. கட்டியாக மாறிவிடுமோ என்று பயப்படக்கூடிய நிலை. அபூர்வமான பச்சிலைச் சாறு பூசி, வீக்கத்தைப் பக்குவமாகக் குறையச் செய்தார். ஊரெல்லாம் கொடி ஏற்றுகிறார்கள்! வெற்றிக் கீதம் பாடுகிறார்கள்! தோரணங்கள் எங்கு பார்த்தாலும்! குப்பத்திலே கூடத்தான்!

"நாலு நாளைக்கு சேற்றிலே இறங்கி வேலை செய்யக்கூடாது சடையப்பா!"—என்று கூறுகிறார், தைலத்தைத் தடவியபடி.

## மறப்பதென்றால் ஆகாது!

கல்வியினைப் பயில்தற்கும் ஆட்சி மன்றக்
கணக்கதனைப் பேசுதற்கும், வழக்கு மன்றில்
சொல்விளக்கம் புரிதற்கும் இந்த நாட்டில்
சுவைத்தமிழே இனியென்று சட்டம் செய்த
நல்லோராம் பேரறிஞர் அண்ணா வாழ்க!
நல்லவையாம் தமிழகத்து அரசும் வாழ்க!
வல்லதமிழ் மொழிபோற்றும் அரசை மக்கள்
வழிவழியும் மறப்பதெனில் ஆகா தய்யா!
கூடாத இந்திமொழிக் கொடுமை தன்னை
கூர்மழுங்கச் செய்யவொரு சட்டம் செய்து
வாடாத தமிழ்மலரின் மெருகைக் கூட்டி
வாடுமக்கள் அச்சத்தைப் போக்கி விட்ட
தேடாது தேடிவந்த ஆட்சி வாழ்க!
தென்தமிழர் உரிமையதன் சின்னம் வாழ்க!
பாடாத புலவரெலாம் பாடிப் போற்றும்
பைந்தமிழின் மணங்கமழும் அரசு வாழ்க!

—பொன்-செல்வக்கணபதி.

''நாலு நாளைக்கா? முடியாதுங்களே. பண்ணையார் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாரே, நாளை மறுநாள் வேலை தொடங்கியாக வேணும்னு. வேலையை நிறுத்திவைக்க முடியுமுங்களா?'' உழவன் கேட்கிறான்.

''அப்படியானு, தைலம் தடவி என்ன பலன்?''—ஏக்கத்துடன் கேட்கிறார் மருத்துவப் பெரியார்.

''படிப்படியாகக் குறையட்டுங்க வீக்கம். தங்கமான மனசு உங்களுக்கு. அதனாலேதான், காலிலே வீக்கம் வடியாத முன்பு வேலைக்குப் போகவேண்டாம்னு புத்திமதி சொல்றிங்க... ஆனா அதைப் பார்த்தா முடியுமுங்களா...வயிறு ஒண்ணு இருக்கதுங்களே...'' என்று உழவன் சோகமாகக் கூறுகிறான். அறிவானந்தர், மருந்துப் பேழையைச் சரிப்படுத்தியபடி உருக்கமாகக் கூறுகிறார்.

''வயிறு இருக்குது, வயிறு! வீக்கமோ ஏக்கமோ, காய்ச்சலோ கடுப்போ, இருமலோ இழுப்போ எது இருந்தா என்ன...வயிறு இருக்குதே வயிறு...''—என்று முணுமுணுத்தபடி செல்கிறார்.

வழியில், சிறுவர் சிறுமியர் 'தாத்தா! தாத்தா! என்று கூவியபடி அறிவானந்தரைச் சூழ்ந்துகொள்கிறார்கள். சோகம் மறைகிறது. முகம் மலருகிறது. எதிர்காலமே! எதிர்காலமே!—என்று கூறியபடி செல்லமாகக் குழந்தைகளைத் தட்டிக் கொடுக்கிறார். பழத்துண்டுகளும் பண்டமும் தருகிறார். ஒரு சிறுவன் முகத்தில் படிந்துள்ள கரியைத் துடைத்துக் கொள்ளச் சொல்கிறார். ஒரு குறும்புக்காரச் சிறுவன் வேறோர் சிறுவனுடைய துண்டை எடுத்துத் துடைக்கிறான். அறிவானந்தர், 'அட! போக்கிரி! இவ்வளவு சிறியவயதிலே எப்படி உனக்குப் பெரியவர்களின் போக்கு வந்துவிட்டது!' என்று கூறியபடி, அதட்டுகிறார். அவன் ஓடுகிறான். அறிவானந்தர் சிரித்தபடி நடக்கிறார். ''கள்ளங் கபடமில்லாத குழந்தைகள்!! போங்க, போய் விளையாடுங்கள்...... நன்றாகச் சிரித்துக் குதித்து விளையாடுங்கள். பாடுங்கள்! ஆடுங்கள்! மான் போலத் துள்ளித்துள்ளி விளையாடுங்கள்...'' என்று அன்பாகக் கூறுகிறார்.

எருது ஓட்டி வருபவன், ஏர் தூக்கி வருபவன், கட்டை தூக்கிச் செல்பவன், பார மூட்டையைச் சுமந்து செல்பவன், இடுப்பில் குடம் தூக்கி வருகிற பெண், ஆகிய அனைவருமே அறிவானந்தரைக் கண்டதும் அன்பும் மரியாதையும் காட்டுகின்றனர்.

ஒரு காலைச் சற்று இழுத்து இழுத்து நடந்தபடி வந்துகொண்டிருக்கும் ஒருவன், அறிவானந்தரைக் கண்டதும் மரியாதை செய்துவிட்டு, ''ஏதோ ஒரு விதமா நடந்துபோக முடியுதுங்க, உங்களோட புண்யத்தாலே'' என்று கூறுகிறான். முதியவர் அவனைத் தன் எதிரில் நடக்கச் சொல்லிப் பார்த்துவிட்டு 'ஐந்தாறு நாளிலே சரியாகிவிடும். இந்த இழுப்பு இருக்காது...மறந்துவிட்டேனே உன் பெயர் என்னப்பா...?'' என்று கேட்கிறார், ''சன்னாசி'' என்று அவன் கூறுகிறான். 'ஆமாம்! மறதி! அது சரி, சன்னாசி! உன் சம்சாரத்தோட இடுப்பு வலி எப்படி இருக்குது?'' என்று விசாரிக்கிறார். சன்னாசி சிறிது கூச்சத்துடன், ''கொஞ்சம் அதிகமாத்தான் இருக்குதுங்க. இன்னக்கி அல்லது நாளைக்கு பிரசவம் ஆயிடும்னு சொல்றாங்க,'' என்று தகவல் தருகிறான்.

''இழுப்பு வலி இவனுக்கு! இடுப்பு வலி இவன் தேவிக்கு!—என்று மெல்லக் கூறியபடி நடக்கிறார். அவருடைய மனக்கண் முன்பு கடினமாக உழைத்திடுவோரின் உருவங்கள் தெரிகின்றன. கவலை கொள்கிறார். ''பாவம்! தங்கமானவர்கள்! தத்தளிக்கிறார்கள்! காரணம் கூடத் தெரியாமல். ஓயாத உழைப்பு! சொன்னானே, வயிறு ஒண்ணு இருக்குதுன்னு......வயிறு! பாடு படுகிறார்கள் அதை நிரப்ப...... ஆனால் பசியும் பட்டினியும் போகவில்லை...



சற்று ஆடம்பர உடையுடன் அவ்வழி வந்துகொண்டிருக்கும் ஒருவன், அறிவானந்தருக்கு

வணக்கம் செய்துவிட்டு, "விருந்துக்கு ஏன் பெரியவரே! வரவில்லை!" என்று கேட்கிறான். ஏதோ சிந்தனை அவருக்கு. ஆகவே விவரம்புரியவில்லை. "விருந்தா? எங்கே?" என்று கேட்கிறார். "நமது வீரபாண்டியன் மாளிகையிலே வெற்றி விழா விருந்து நடத்தினார்களே! நீங்கள் வரப்போவதாகப் பேசிக்கொண்டார்கள்......" என்று அவன் நினைவுபடுத்துகிறான். அறிவானந்தரின் முகத்தில் கவலைபடிகிறது. "விருந்துக்கும் விழாவுக்கும் பஞ்சமில்லை. மாளிகை எல்லாம் ஆடல், பாடல்! இதோ இதுகள் மார்பு உடையப் பாடுபட்டுப் பாடு பட்டு, சொன்னானே சடையப்பன், வயிறு ஒண்ணு இருக்கே......ன்னு...... அதை நிரப்பும் வேலையில் காலமெல்லாம் செலவிடப் பார்க்கிறேன்...... ...என்று அறிவானந்தர் கூறிடக் கேட்டு, விருந்துக்குச் சென்று வந்தவன் சிறிதளவு கோபம் கொண்டு "பெரியவரே! ஊர் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க, நீங்கள் மட்டும் கவலையுடன் இருக்கிறீர்களே. சரியா இது" என்று கேட்டுவிடுகிறான். "ஏன் ஊர் மகிழ்கிறது என்று தெரியாததாலேதானப்பா, எனக்கு சங்கடம், சஞ்சலம், எல்லாம். கொட்டுமுழக்கு! என்கிறான் கொடிகாத்தான். "குலை நோகுதே! குலைநோகுதே! என்று துடிக்கிறான் கோடி வீட்டான். விருந்து, வேடிக்கை, விழா, ஊரிலே! மருந்து கிடைக்கவில்லை இந்த மக்களைப் பிடித்திருக்கிற நோய் நொடி போக்கிட. வாள் இருக்கிறது பளபளப்பாக அங்கே! வீரவாள்! வெற்றிவாள்! இங்கே? வயிறு இருக்கிறது வயிறு! சொன்னானே சடையப்பன், அந்த வயிறு!" என்று கூறிக்கொண்டே வீடு நோக்கி நடந்தார் அறிவானந்தர். நெடுநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தார். பிறகு மெள்ள அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு தமது மருத்துவ வேலையைத் துவக்கினார்.

விழி இருக்கிறது, விருப்பம் மிக இருக்கிறது! விழா காண வேண்டுமென்று. விழாவில் அவர் இருப்பார்! இந்த அப்பா'வைத்தானே காணோம் என்று விசாரப்பட்டு விசாரப்பட்டு வாடினாள் திருமதி. அவைக்குத் தன்னையொத்த மங்கையர் அணிபணிபூண்டு அழகுப் பதுமைகளெனச் செல்வதைக் காணுகின்றாள். தன்னை அழைத்துக்கொண்டு தந்தை செல்லமாட்டாரா? அதோ திருமதி! குணாளனை மணவாளனாகக்கொள்ளப் போகும் பாக்கியவதி என்று மெல்லிய குரலிற் பலர் கூறக்கேட்டு, இன்பம் பெறலாமே என்று ஏங்கி நின்றாள் திருமதி! அவரோ குப்பத்து வேலையில் மும்முரமாகிக் கிடந்தார். அந்த வேலை முடிந்தபிறகு வீடுவந்தார்; வந்ததும் மறுநாள் தேவைப்படும் மருந்து தயாரிக்க முனைந்தார்.



நல்ல வேளையாக, குணாளனே வந்தான்...... திருமதிக்கு உயிர் வந்தது.

அவனிடம் அணங்கு களத்துக் காதைகளைக் கேட்கிறாள், அவனோ, அதிலே ஆர்வம் காட்டாமல் ஏதோ அக்கறையற்றுப் பேசுகிறான்.

"களம் செல்லும்போதே, நான் நினைத்தேன். அடியோடு என்னை மறந்துவிடுவீர்கள் என்று. நினைத்த படிதான் ஆகிவிட்டிருக்கிறது. எதிரிலே நான் நிற்கிறேன். நீங்களோ எதையோ எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். என்னை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் அஞ்சா நெஞ்சன் என்பதல்லவா சிறப்புப்பட்டம். விருது பெற்றாகிவிட்டது. இனி இந்தத் திருமதியைத் திரும்பியும் பார்த்திடுவதேது! எந்தச் சீமான் மகளோ! இளவரசி எவளேனும் ஓலை அனுப்புவாள் என்ற நினைப்போ......ஓயமால் நான் உள நிக் கிடக்கிறேன். யாரைப்பற்றிய நினைப்பிலே இப்படி என்னை மறந்து நிற்கிறீர்?" என்று திருமதி கேட்கிறாள்—காதல் மடவார்க்கே உரிய கனிச்சுவை கோபத்துடன்.

'மாலதியைத் தெரியுமா உனக்கு?" என்று ஒரு கேள்வியைக் கிளப்பினான் குணாளன்.

திருமதியின் கண்கள் சிவந்தன, "மாலதி! மாலதி! எந்த மாலதி அவள்?" என்று கடுங்கோபத்துடன் கேட்டாள்.




## கைநாட்டின் கதை

கொலை கொள்ளைகளில் ஈடுபட்டவர்களை அவர்களது கைரேகையே காட்டிக் கொடுத்து விடுகிறது. இந்தியாவில் இன்றும் வழக்கத்திலுள்ள 'கைநாட்டு'ப் பழக்கம்தான் இதற்கு ஆதாரம். லண்டனிலுள்ள புகழ் பெற்ற துப்பறியும் நிறுவனமான 'ஸ்காட்லாந்து யார்டு' போலீசார்தான் முதன் முதலாக 1901-ல் கைரேகைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தினர்.

இதற்குத் தூண்டுகோலாக இருந்தவர், அப்போது வங்காளத்தில் தலைமைக் காவல்துறை அதிகாரியாக இருந்த ஸர். ஹென்றி என்பவர் தான். இவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்று லண்டன் திரும்பியதும், 'இந்தியாவில் வழக்கத்திலிருக்கும் கைமுத்திரை (கைநாட்டு)ப் பழக்கத்தை ஆதாரமாகக் கொண்டு அதே முறையில் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கலாம்' என்ற கருத்தைத் தெரிவித்தார். அதே நேரத்தில், ஒரு கொள்ளை வழக்கில் சந்தேக முறையில் கைதான இரட்டைப் பிறப்பான இரு சகோதரர்களில் யார் உண்மைக் குற்றவாளி என்று கண்டுபிடிக்க முடியாமல் தவித்தனர், லண்டன் காவல் துறையினர். ஸர். ஹென்றியின் யோசனைப்படி ரேகைப் பரிசோதனை மூலம் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்தனர். அதில் தொடங்கிய பழக்கம் இன்று உலகம் முழுதும் பரவிவிட்டது.

தகவல் : தயாள்.

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## ஒரே ஒருவராம்!

விஞ்ஞானமும் அணு ஆற்றலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர வளர, புதிய புதிய பிரச்னைகள் அன்றாடம் தோன்றிக்கொண்டே வருகிறது! ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் என்றும், ஆதிக்கப் போட்டி என்றும், பலப்பரீட்சை என்றும் மகுடமிட்டுக்கொண்டு விளக்கவேண்டிய பி ர ச் னை க ள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றன அகிலத்தின் எண்டிசையிலும்! ஆனால், இவை எந்த ஒன்றிலும் கவனமோ அக்கறையோ இன்மை காரணமாக-அல்லது எதனிலும் ஈடுபடக்கூடாது என்ற விரக்தி காரணமாக பிரச்னைகளே எழாமல் தடுத்துக்கொள்ளும் ஆற்றல் ஒருவருக்கு இருக்கிறதென்றால், பாராட்டாமல் இருக்க முடியுமா அவரை! யார் அந்த அவர்? மலேசியத் தலைமை அமைச்சர் அப்படித்தான் இருக்கிறாராம்! துங்கு அப்துர் ரகுமான், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரச்னைகளே ஏதுமில்லாததால், உலகிலேயே தான் ஒருவரே மகிழ்ச்சியுடனும், அமைதியுடனும் இருப்பதாக அறிவித்திருக்கிறார்! அந்த வித்தையை ஒவ்வொரு தலைமை அமைச்சர்களும் கற்றுக்கொண்டு விட்டால்...!

## ஒருமொழிக் கொள்கையாமே!

தமிழகத்தில் பல எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. மொழிக் கொள்கையில் எந்த ஒன்றும் ஒரு ஒருமித்தக் கருத்துக்கு வந்தபாடில்லை! சில மும்மொழித் திட்டம் தான் மாமருந்து என்கின்றன. இந்தி பேசப்படாத பகுதிகளைப் பொறுத்தமட்டில் இது சரியாக இருக்கக் கூடும். இதே மும்மொழித் திட்டம் இந்தி பகுதிகளில் இரு மொழித் திட்டமாகி விடுகிறது. இதுபற்றிப் பேசுவாரைக் காணோம்! இந்தி பேசாத பகுதிகளில் இரு மொழித் திட்டம் என்றால் ஆங்கிலமும் வட்டார மொழியும்தான் என்றாகிறது. இந்தி பகுதிகளில் இரு மொழித் திட்டம் என்றால் இந்தியும் வட்டார மொழியும் என்று தான் பொருள்படும். மொத்தத்தில் மொழிக் கொள்கையில் இரு மொழி என்பதும், மும்மொழி என்பதும் நாடு முழுவதுக்குமாகப் பொருந்தக்கூடிய ஒன்றாகத் தென்படக் காணோம்! இந்த நிலையில் இக்கிழமை நடைபெற்ற சட்ட மன்றக் கூட்டத்தில் தமிழக சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர், தம் கட்சிக் கொள்கை ஒரு மொழிக் கொள்கைதான் என்று விளக்கமளித்திருக்கிறார்! அந்த மொழி எது? இந்திய அரசின் விருப்பப்படி இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்று கூறும் மொழி எது? சோஷலிஸ்ட் கட்சி விளக்கம் கொடுத்தால் நல்லது!


## 'முச்சந்தி'யின் முணு முணுப்பு!

அரசியலை நடத்திச் செல்வதில் தமிழகக் காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு முடமாகிப்போய் இருக்கிறது என்பதனை நினைத்துப் பார்க்கவே சிரிப்பு சிரிப்பாக வருகிறது! பதவி போனாலும் போனது, கூடவே அதன் அறிவாற்றலுமா போய்விட வேண்டும்? மொழித் திட்டத்தில் அ. இ. கா. க. மட்டும் குழம்பிப்போய்க் கிடக்கவில்லை; தமிழகக்காங்கிரசும்தான் என்பது தெரிந்த விஷயம்தான்! ஆனால், அரசியலை விலைப்படுத்தக் கையாள்கின்ற முறைமைகள், அவர்களது மேலிடங்கள் கூச்சல் போடுகிற ஒருமைப்பாட்டைக் கொண்டு வந்து கரை சேர்ப்பதாகத் தெரியவில்லை. தமிழக அரசு, தனது மொழிக் கொள்கையைத் திட்டவட்டமாக சட்ட மன்றத் தீர்மானம் மூலம் புலப்படுத்திவிட்ட பிறகு, காங்கிரஸ் சரக்குக்கு பவிஷு குறைவுதானே! இதை உணர்ந்து கொண்டால், அறிவுள்ள ஒரு கட்சி என்ன செய்ய வேண்டும்? அந்த கட்சியின் செய்தி இதழ் எப்படி நடந்துகொள்ளவேண்டும்? பயிற்சி மொழியாக தமிழ் இருக்கக் கூடாதென்றும், ஆ ங் கி ல ம் தா ன் இருக்க வேண்டும் என்றும் கிளர்ச்சி தொடங்கவேண்டுமென்று அந்த கட்சியின் எழுத்தாளர் ஒருவர் துடியாய்த் துடிக்கிறார். தமிழே பயிற்சி மொழி என்றாலும், ஆங்கிலம், தரத்தில் குறைவுபடாதிருக்கும் வகையில் கூடவே கட்டாயப் பாடமாக இருக்கும் என்று தமிழகத் தீர்மானத்தின் பொருளை அவர் புரிந்துகொள்ளாமற்போய் விட்டதில் வியப்பில்லை! கல்லூரி மாணவர்களைக்கூட தம்போல் கருதி எ ழு த த் தொடங்கிவிட்டிருக்கிறார்! பாவம்! முச்சந்தி எழுத்தாளர்!

## நீதி தூங்கிப் போகுமோ?

நீதிமன்றத்தை அவமதித்து நடந்துகொண்டதாக கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்! இந்தியத் துணைக் கண்டத்து வரலாறு, புதிய புதிய சம்பவங்களைத் தன் ஏட்டில் பதிய வைத்துக்கொண்டே வருகிறது—தன் எதிர்கால சந்ததியினருக்குத் தன்னை எடுத்துக் காட்ட. இதே வேளையில் மத்திய அரசின் நியமன கமிஷனர் ஒருவர் நீதிமன்றத்தின் முன்பு கொண்டு வரப்பட வேண்டுமென கல்கத்தா உயர்நீதி மன்றம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது. அந்தமான், நிகோபார் தீவுகள் மத்திய அரசின் ஆதிக்கப் பகுதிகளாகும். இதனை, மகாபீர்சிங் எனும் பிரதம கமிஷனரும், மாலிக் பலதேவ் மல்ஹோத்ரா எனும் துணைக்கமிஷனரும் நிர்வகித்து வருகிறார்கள் இந்திய அரசுக்காக! வணிக நிறுவனம் ஒன்றின் வாணிப உரிமையை ரத்துச் செய்துவிட்டார்களாம் அவர்கள்! அது முறைகேடானது என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது! அந்த தீர்ப்பினை சட்டை செய்யாமல், தங்களது உத்திரவைச் செயல் படுத்தினார்களாம் அந்த கமிஷனர்கள்! நீதி தூங்குமா? உங்கள் இருவரையும் ஏன் கைது செய்யக்கூடாது? என்பதற்குக் காரணம் காட்டுமாறு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது நீதிமன்றம்! மன்றத்தின் முன்பும் வரவேண்டும்! நீதி, கேட்கிறது! நீதி பரிபாலனம் செய்வோர் என்ன செய்யப் போகிறார்கள்? நீதி தூங்கியே போகுமா? அழுமா? வெற்றி கொள்ளுமா?

தொகுப்பு : ராஜிமணாளன்.




# பண்பாட்டைக் காப்பீர்!

அன்புள்ள நண்பா!

பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் கலந்து பருகக் கொடுத்தால் நீ எத்தனைப் பரவசத்தில் திளைப்பாய்! அதுவும் வண்டார் குழலியாம் — எரிவளை எழிலியாம் உன் இல்லத்தரசியின் தளிர்க்கரங்கள் அதனை எடுத்து—அன்பும் ஆதரவும் உமிழ்கின்ற கண்களோடு —அந்த இன்பத்தையெல்லாம் நினைவுகொள்கின்ற ஒருவகை இதமான பார்வையைக் கலந்து, கொடுக்கப்பட்டால், நீ புற உலகத்திலிருந்து சில விநாடிகள் பிரிந்து அகஉலகிற் சஞ்சரிக்கமாட்டாயா என்ன?

எத்தனை எத்தனை நினைவலைகள்! அந்த நேரத்தில்! மாமரத்தமர்ந்து மதுவருந்திப் பாடும் கோகிலங்களின் குரல் போன்ற கற்பனை! கார்முகில் கண்டு களித்து சிறகை விரித்தாடும் தொழில்சூழ் மஞ்ஞைகள்! ஊழி நடம்புரியும் ஆழி அலைக்கூத்து! தென்பாங்குத் தென்றல்! தேமதுரக் கீதம்! எல்லாமாகச் சேர்ந்து உன் நினைவில் — எண்ணத்தில் — கற்பனையில் இடம் பற்றுமலா இருக்கும்?

பாண்டியன் நெடுஞ்செழியன் அவைக்களம் — பத்தினித் தெய்வம் கனல் உமிழும் கண்களோடு — துர்க்கைபோ! தீத்திறம் படைத்தவந்த தேவதையோ என்று ஐயுறும் நிலையைத் தோற்றுவிப்பவளாக பாண்டியனை ஏறிட்டு நோக்கியபடி நிற்கிறாள்.

பாண்டிமாதேவியின் சிலம்பு உடைக்கப்பட்டு அதனின்று முத்துப் பரல்கள் சிதறியதால் உண்மை உணர்ந்து கொலைக் குற்றத்துக்கு ஆளாகிவிட்ட உணர்வோடு, பாண்டிமாதேவியை அவன் பார்க்க — அதன் பொருளைப் புரிந்துகொண்டு பாண்டியனை பாண்டிமாதேவி ஆதுரத்தோடு பார்க்க — அந்த ஒருகண நேர காட்சியை மட்டும் கற்பனை செய்து பார்! இருவரது பார்வையின் ஆழ உணர்ச்சியை மட்டும் எடுத்துக் கொள்! ஆதுரத்தின் ஆழம் எந்த அளவு என்று புரியும்!

சோழன் செங்கண்ணன் காலத்துப் பெரும் புகழ்ப் புலவராம் பொய்கையாரது நல்லிசை நாடெல்லாம் பரவிக்கொண்டிருக்கிறது. அந்தப் புகழ் கேட்டுப் பூரித்த செங்கண்ணன் — பொய்கையார் வாயால் தன்னைப்பற்றி ஒரேயொரு பாட்டுப் பாடவேண்டும் என்ற விழைவை உண்டாக்கி விட்டுவிடுகிறது. அந்த விழைவுதான் விளைத்த விபரீதங்கள் பலவற்றைக் கடந்து பொய்கையார் செங்கண்ணனைப் பாட ஒப்புகிறார் — ஒருவித நிபந்தனையோடு! களவழி நாற்பது பாடப்படுகிறது! செங்கண்ணன் மீது பாடப்படுகிறது! பல நாள் அல்ல— பல ஆண்டுக்கால வேட்கை தணியப்பெறுகிறான் செங்கண்ணன்! அந்த நிலையில் அவன் இதயம்! எத்தனை எத்தனை இன்பத்தால் நிரம்பி இருக்கும்!

இவை போன்ற நிறைவில், இதுவரையில் நீ, அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது தொடரோவியத்தில் மூழ்கி இருந்தாய்! இன்ப ஒளியில் உன் மகிழ்வுப் பிரகாசத்தின் சகஸ்ரகாந்தம் தான் எப்படி எப்படி இருந்திருக்கும்!

மன்னித்துக் கொள் நண்பா! அந்த இன்ப நினைவுகளிலிருந்து இந்நாட்டு அரசியலுக்கு உன்னை அழைக்கிறேன்!

முகம் சுளிப்பது தெரிகிறது! முணுமுணுப்பதும் புரிகிறது! நாட்டு நடப்பும் நடவாத நிகழ்ச்சியும் கலந்த பின்னப்பட்ட அந்த இன்ப நினைவுகளிலிருந்து விடுபட மறுக்கிறாய்! என்றாலும் வந்துதான் தீரவேண்டும். ஏனென்றால் அறிஞர் பெருந்தகை அவர்களது கதையிலேயே அரசியல் கலந்துதான் இருக்கிறது! அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய அரசியல், கொண்டு செல்ல விரும்பும் அரசியல், தமிழகத்தில் எப்படி உருமாற முனைந்து கொண்டிருக்கிறது என்பதனைக் கொஞ்சம் பார்த்துதானே தீரவேண்டும்?

கதையில் வரும் அறிவானந்தரின் எண்ணங்களும் செயல்களும் எப்படிப்பட்டதாயிருக்கின்றன? கண்டாய் அல்லவா!

பசிப்பிணி! அகற்றும் பணியில் அவர் தம் ஆயுளையே அர்ப்பணித்திருக்கிறார்! பசியெனும் பிணிநோய் அகற்றப்பட்டால் மட்டுமே, நாட்டின் புறநிகழ்ச்சிகள் பொலிவு பெற்றதாயிருக்க முடியுமென்று நம்புகிறார்!

வெற்றிச் சிறப்பினை விண்டுக் காட்டுவதாயினும் சரி, சாதனை அளவை எட்டிப் பிடித்த இன்ப நிறைவை எண்ணிக் களித்தலாயினும் சரி, அக்காரணங்களால் கோலாகலமான விழாக்கள் கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல், கொலு வைத்தல் கொடியேற்றல் போன்ற கோலாகலங்கள் பட்டி தொட்டி எங்கணும் கொண்டாடப்பட்டாலுங்கூட, அவற்றிலே உண்மையான ஒரு இன்பம் பிறக்க வேண்டுமானால், மனப் பிடிப்புள்ள ஒரு நிலை ஏற்பட வேண்டுமானால், மக்களின் பசிப்பிணி முதலில் அகற்றப்பட்டாக வேண்டும்! அப்போதுதான் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற சிறப்பினைப் பெற இயலும்!

அறிஞர் அண்ணாவின் அரசு பதவிப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் முதன் முதலாக இப்பணியில் தான் தன் முழு சக்தியையும் செலவிடத் தொடங்கி இருக்கிறது!

ஆனால்? இந்த 'ஆனால்' போட்டு இதுவரை எடுத்துக் காட்டிய விவரத்துக்கு நேர் எதிரிடையான நிலையை அல்லவா எழுதவேண்டி இருக்கிறது நண்பா!

இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமே ஏதோ ஒருவிதமான வெறுமை படர்ந்துகொண்டிருக்கிறது.

அத்தனை மாநிலங்களிலும் ஒருவிதமான அமைதியற்ற சூழ்நிலை உருவாகி கொப்பும் கிளையுமாகத் தழைத்துக் கொண்டிருக்கிறது.

இந்திதான் வேண்டும் என்பதற்காக ஒரு சில மாநிலங்களிலே போராட்டம்!

ஆங்கிலமே கூடாது என்பதற்காக சில மாநிலங்களில் குழப்ப நிலை.

இந்தியுடன் ஆங்கிலம் என்பதற்காக சில இடங்களில் பூசல்!

ஆங்கிலம் மட்டுமே என்பதற்காகக் கலவரங்கள்! இரண்டும் வேண்டாம் என்ற குரலொலிகள்!

பதவிகள் பறிபோய் விடுமோ என்ற கிலியில் கூச்சல்கள்! குழப்பங்கள்! பறிபோய் விட்டதே என்ற அங்கலாய்ப்பில் ஆர்ப்பாட்டங்கள்!

பொருளாதார முன்னேற்றம் கருதியோ—வரி, வருவாய்களில் உரிய பங்கு கேட்டோ உச்சக் குரல்கள்!

யாவுமாகச் சேர்ந்து அனைத்து மாநிலங்களிலும் பதட்ட நிலையும் அமைதியற்ற நிலையும் உருவாகிக் கொண்டே வருகிறது.

ஆனால், மீண்டும் இந்த 'ஆனால்'தான்!

ஆனால் நண்பா! அண்ணாவின் அறிவானந்தர் படும் பாட்டை, அண்ணாவின் அமைச்சரவையும் பட்டுக் கொண்டிருக்கிறது — பசிப்பிணி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டே!

இதே வேளையில், வாய்க் கொழுத்ததுகள் சிலவும் கிடைத்தவரையில் லாபம்—பிடுங்கிய வரையில் ஆதாயம் என்கிற எண்ணங்கொண்டதுகள் சிலவுமாக நாட்டின் அரசியலைத் திசை திருப்பிவிட முயல்கின்ற கொடுமையை, எந்த கோல்கொண்டு எடுத்துக் காட்டுவது?

தமிழகத்தில், தமிழக அரசின் இந்தித் தீர்மானம் நாடறிந்த ஒன்றாகி, நாட்கள் பலவாயிற்று!

இன்னமும் தமிழகத்தில் சில பல இடங்களில் 'இந்தி எதிர்ப்பு'ப் போராட்டங்கள் நடைபெறுகிறது என்றால், உண்மையிலேயே அவை இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்தானா? தமிழக அரசு எதிர்ப்புப் போராட்டமா?

இனம் புரிந்துகொண்டாக வேண்டும்!

படிக்காத மேதை பட்டந் துறந்து—படித்த மேதை பட்டஞ் சூட்டிக்கொண்ட பின் 'ஒழுங்கான எதிர்க் கட்சி'யை உருவாக்கிக் காட்டுவார் என்ற நைப்பாசை கொஞ்ச நஞ்சமிருந்தது! அது தவறு என்பதற்கான சான்றுகள் மலிந்து கொண்டிருக்கின்றன.

மாணவர்கள் சமுதாயத்தை உசுப்பிவிட்டு—உரத்தக் குரலில் 'ஒழிக' போடலாம் என்ற திட்டவட்டமான முடிவிலேயே காங்கிரஸ் இயங்கத் தொடங்கிவிட்டதோ என்றே எண்ணுற வேண்டிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஒரு அரசியல்வாதி தன் வாய்க் கொழுப்பை, அரசியல் மேடையிலேயே கொப்பளித்து உமிழ்ந்திருக்கலாம்; மாணவர்கள் பக்கம் துப்பி இருக்கத் தேவையில்லை.

## எழுத்தாளர்களுக்கு

தமிழகப் பண்பாட்டை, வாழ்க்கை விளக்கமாய்க் கொண்ட சிறந்த சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன. 'காஞ்சி' இதழின் மூன்று பக்கங்களுக்கு மிகாமலும், காகிதத்தின் ஒரே பக்கத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பிரசுரிக்கப்படும் கதைகளுக்கு, தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

போதிய தபால் தலைகள் இருந்தால் மட்டுமே, பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப்படும்.

—ஆசிரியர்.

துப்பியும்விட்டார்! மண்ணையும் பிசைந்து வாரியுமா இறைக்கவேண்டும்!

மண்டைக் கனம் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்; மாமேதை என்ற நினைவும் உடன் தொக்கிக் கொண்டிருக்கலாம்.

மாணவர்கள் நாளைய காந்தியடிகள்! பட்டேல்கள்! நேருக்கள்! காமராசர்கள்! ஏன்—சுப்பிரமணியங்கள் கூட அல்லவா!

பக்குவம் தெரியவேண்டாமா? விளைவுகள் எத்தனைக் கொதிப்பை ஏற்படுத்திவிட்டிருக்கின்றன.

ஒரு கட்சித் தலைவரின் ஆணவமிக்கபோக்கு—ஒரு நாட்டின் அமைதியான சூழலையே கெடுக்கத் தக்கதாயிருக்கிறது என்றால், அமைதி வழி விரும்பும் மக்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்களா?

பொறுக்க முடியாது; பொறுக்க மாட்டார்கள்.

ஆனால் நண்பா! பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்! காரணம், காங்கிரசுத் தலைவர் அவர்! செத்த மாடுகளின் தோல் பறையாகி ஒலிப்பது போன்றதே அந்தக் கட்சியின் பேச்சுக்கள்! செயல்கள்!

சுப்பிரமணியனார் எதிர்ப்புக் குரலா? இந்தி எதிர்ப்புக் குரலா? சில இடங்களில் இரண்டும் இணைந்திருக்கிறதே!

வியக்கக் கூடாது! பயிற்சியற்ற நிலை! பரிதாபகரமான அரசியல் பாலபாடம்! நூறு வயதை அடையப் போகிற காலம் அணுகிக்கொண்டிருப்பதனால் ஏற்பட்ட மூப்பாகக்கூட இருக்கலாம்!

கழக அரசு பசிப் பிணியறுக்கும் பாதையில் நடையிட்டுக் கொண்டிருக்கிறவேளையில், அதனைத் தடம் புரட்டிவிட எடுக்கின்ற முயற்சிகள் அவை! எக்காரணங் கொண்டும் கழக அரசைக் கவிழ்க்க முடியாது என்பதைப் புரிந்த இதயத்தின் ஏமாற்றப் பிரதிபலிப்புகள் அவை!

ஏமாறுமலிருக்க வேண்டும் மாணவர்கள்!

அரசின் பாதையில் அறிவானந்தர்களாக முயல வேண்டும்! திருமதிகளாக மாறி துணைபுரிய வேண்டும்!

தீயதைப் பேசாதே! தீயதைப் பாராதே! தீயதைக் கேளாதே! என்பதுதான் இன்றைய மாணவர்களது தாரகமாக இருக்கவேண்டும்!

அது ஒன்றுதான் அறிஞர் அண்ணாவின் கரத்தை வலுப்படுத்தும்! தமிழகத்தின் பண்பாட்டைக் காப்பாற்றும்!

பாலும், தெளிதேனும் பாகும், பருப்பம் கலந்து இல்லாள் ஊட்டப் பருகும் இன்பமும் ஏற்பட்டதாக இருக்க முடியும்!

அன்புள்ள,

திருவாரூர்-முத்துராமன்.

# வெட்டும்-ஒட்டும்!

**பஞ்சாபில் கட்சி மாறியவருக்கு மந்திரிப் பதவி!**

கட்சி மாறுவதைத் தடுக்க, தரவேண்டிய தண்டனையை, மந்திரிப் பதவியாகவே தந்துவிடலாம் என பரிந்துரைக்கலாமா? மேற்கு வங்கத்தைக்கூட இது காப்பாற்றக் கூடுமே!

**தீனதயாள் உபாத்யாயாவின் படுக்கையைக் காணோம்!**

படுக்கைக்கு உரியவரையே பறித்துக்கொண்ட படுபாவிகள், அவரது படுக்கையையும் பறித்துக்கொள்ள நினைத்துவிட்டிருக்கக்கூடும் என்று சந்தேகப்படலாமா?

**உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு; சுப்பிரமணியம் புகார்!**

கணக்குக் கேட்கின்ற காரணத்தாலேயே காங்கிரசுக்குள் பல குத்து வெட்டுக்கள் உண்டே! அது, மாநாட்டை நடத்தியவர்களிடையேயும் புகுந்து, சட்டம்—ஒழுங்கு என்ற கூப்பாடு போட முடியாதா என்ற அங்கலாய்ப்பாகத்தான் இது இருக்க வேண்டும்!

**பழநி மாணவர்கள் வகுப்புகளுக்குப் போகவில்லை!**

வகுப்புக்களுக்குச் சென்றால்தானே படித்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது! கிளர்ச்சிகளுக்கு ஏதாவது காரணங்கள் கிடைக்காமலா போய்விடுகிறது! பெற்றோர் தம் பொருளாதாரம் சீராக இருக்கும் வரையில் பள்ளிகளையோ, கல்லூரிகளையோ பற்றி எதற்காகச் சிந்திக்க வேண்டுமாம்!

**மோதலில் நான்கு பேருக்குக் காயம்! கொச்சியில்!**

இது கொச்சியில் அல்லவா நடைபெற்றுவிட்டது; தமிழகத்தில் நடைபெற்றிருந்தால், அதற்கு தி. மு. க. - வே காரணம் என்று பேசமுடியுமே என்று அங்கலாய்க்கிறார் இங்குள்ள ஒரு காங்கிரசுக்காரர்!

**விட்டுக் கொடுத்து மொழிச் சிக்கலைத் தீர்க்க அழைக்கிறார் குடியரசுத் தலைவர்!**

எதை விட்டுக் கொடுப்பது? யார் விட்டுக்கொடுப்பது என்பது தானே இந்தப்பிரச்னையின் ஆணி வேராகவே இருக்கிறது!

**பாண்டி மன்னனைக் குடிகாரனாகச் சித்திரித்து இந்திநாடகம்!**

பாண்டியன் நெடுஞ்செழியனும் அவன் பத்தினியும் மட்டுமா குடிகாரர்கள் என்று 'இந்தி' கூறும்! இந்தியை எதிர்ப்போர் எல்லோருமே குடிகாரர்கள்தான்! என்று இங்குள்ள சில காங்கிரஸ் குடியர்கள் முணுமுணுப்பது காதில் விழவில்லையா என்ன!

**சிறந்த தமிழ்த்தீர்ப்புக்கு ரூ. 5000 பரிசு; அமைச்சர் மாதவன் அறிவிப்பு!**

நான் ஒரு நீதிபதியாக இல்லையே என்று எந்த தமிழ் வித்தகரும் அங்கலாய்க்கக் கூடாது என்று எச்சரித்து வைக்கிறோம்!

**வட்டார மொழிப்போதனைக்கு துணைப்பிரதமர் ஆதரவு!**

அப்போதுதானே இந்தி தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டிப் பேச முடியும்!

**பானை இருக்கிறது; பணம் இருக்கிறது; படி அரிசி எங்கே?**

இருபதாண்டுக் காலமாக இப்படிக் கேட்கத் துடித்துக் கொண்டிருந்தவர்கள்தான், அந்தத் துடிப்பை இப்போது வெளிக் காட்டுகிறார்கள்! பாவம், நாவரளக் கேட்கட்டுமே! அதுவும் எதுகை, மோனை இசையோடு இருக்கிறதே கேள்வி!

**சுப்பிரமணியம் மயிரிழையில் உயிர் தப்பினார்!**

வலிமை காட்டிய அந்த மயிரிழைக்கு நம் பாராட்டுக்கள்! இப்போதெல்லாம்தான் வாசனைத் தைலங்கள் அந்த வலிவைப் பறித்துக்கொள்கின்றனவே!

**என் கருத்து புண்படுத்துவதாக இருந்தால் வாபஸ் பெறுவேன்; சுப்பிரமணியம் அறிவிப்பு!**

தொடக்கத்திலேயே இப்படி சொல்லிவிட்டிருந்தால் செய்தி இதழ்களின் பரபரப்புக் குறைந்து, விற்பனை பாதிக்கப்பட்டிருக்குமே என்று கவலைப்படுகிறார் ஒரு தினசரி இதழின் உரிமையாளர்!

**எந்த மொழி பேசுபவர்களுக்கும் பங்கம் வரக்கூடாதாம்! (பத்திரிகைத் தலைப்பு)**

சரிதான்! இப்படி 'தாம்' போட்டுத் தலைப்பிட்டிருப்பதால், பங்கம் வர வேண்டுமென்பதுதான் தலைப்பு எழுதியவரின் விருப்பமோ என்று யாரும் நினைக்கக் கூடாது.

**அழகிய மேடைப் பேச்சுக்களைக் கேட்டுத் தமிழர்கள் மயக்கமடைகிறார்கள்; தமிழ்வாணன் பேச்சு!**

எவ்வழி நல்வழி; அவ்வழி நம் வழி! என்று எழுதிக் கொண்டே இருப்பவர் அவர் தானே!

**படி அரிசித் திட்டத்தின் பலன்; அரிசி விலை குறைந்து வருகிறது (செய்தித் தலைப்பு)**

அதுமட்டுந்தானா! காங்கிரசின் பவிஷும் குறைந்து வருகிறதே! என்கிறார் பட்டுத் தெளிந்த ஒருவர்!

**சென்னை நகரில் முகமூடித் திருடன்!**

முகம் மூடாத திருடர்கள் மிகுந்துவிட்டதினால், இப்படித் தங்களைப் பிரித்துக்காட்ட நினைப்பது வரவேற்கத்தக்கதுதானே!

**அரசியலமைப்பு திருத்தப்படும் வரையில் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்; உஜ்ஜல்சிங் வேண்டுகோள்!**

இப்படிக் கூறிவிட்டதன் மூலம், அவரது பதவி இனி நீடிக்காது என்பது மட்டும் உறுதி என்கிறார் ஒரு காங்கிரசுக்காரர்!

**வங்க அசெம்பிளியை சபாநாயகர் மீண்டும் முடக்கினார்!**

முடக்கினால் என்ன கெட்டுவிட்டதாம்! மத்திய அரசுதான் தன் அதிகாரத் துணையால் அந்த 'தீர்ப்பை'யே முடக்கி, அமைச்சரவை செயற்படச் செய்துவிட்டதே! மக்கள் அந்த அதிகாரத்தை முடக்கினால்தான் சுவையானதாக இருக்கும்!

*

# வலியா? ஜலதோஷமா?





## பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

# அமிர்தாஞ்சனம்

## உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

**வலிகளுக்கு:** தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

**ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்:** சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

**அமிர்தாஞ்சனம்**
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.




அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

am-3770


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86. [illegible] தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.